**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 123/2024**

**வா.சா.1**

**திரு. செல்வன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)**

பிரதிவாதியை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் பிரதிவாதியை தெரியாது புரோக்கர் மூலமாகத்தான் தெரிந்துகொண்டேன். புரோக்கரின் பெயர் என்னவென்றால் வெள்ளியங்கிரி. நான் நாமக்கலில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாக கூறும் நாளில் நான் பிரதிவாதியை பார்த்தேனா என்றால் ஆமாம். அவரது குடும்பத்தாரை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவரது கணவர் அரசாங்க ஊழியராக இருந்தார் என்றால் பிரதிவாதிதான் சொன்னார். அவரது மகன் அரசாங்க ஊழியர் என்றால் தெரியாது. 17-06-2021 தேதிக்கு முன்பாக வழக்கு சொத்தை நான் பார்க்கவில்லை என்றால் பார்த்துள்ளேன். எப்போது அவ்வாறு பார்த்தேன் என்றால் 10-06-2021 அன்று பார்த்தேன். வெள்ளியங்கிரி என்பவர் நிலம் வாங்கி கொடுக்கும் புரோக்கர் அல்ல கடன் வாங்கி கொடுக்கும் புரோக்கர் என்றால் என்னிடம் நிலபுரோக்கர் என்றுதான்

அறிமுகம் ஆனார். அவர் எங்கு குடியிருக்கிறார் என்றால் காராப்பாடியில் குடியிருக்கிறார். அவரை எத்தனை நாட்களாக தெரியும் என்றால் நான் நிலம் தேட ஆரம்பித்த ஒரு வருட காலமாக தெரியும். 17-06-2021 தேதிக்கு பின்னிட்டு பிரதிவாதியை எத்தனை முறை சந்தித்துள்ளேன் என்றால் 10 முறைக்கு மேல் சந்தித்துள்ளேன். எந்த தேதியில் எங்கெங்கு வைத்து 10 முறை சந்தித்தேன் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒப்பந்தம் ஏற்படுத்திய தேதியிலிருந்து பிரதிவாதிக்கும் எனக்கும் எழுத்துபூர்வமான கடித தொடர்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் நிலத்தை கிரையம் பெறுவதற்காக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றும் பைனான்ஸ் தொழில் சம்பந்தமாகத்தான் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நிலத்தை கிரையம் பெறுவதற்கு ஒப்பந்தம் போட்டிருந்தால் பிரதிவாதியிடம் ஒப்பந்த காலத்திலிருந்து 3 மாத காலத்திற்குள் எழுத்துபூர்வமான தொடர்பை ஏற்படுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. பைனான்ஸ் செய்ததால் தான் ஒப்பந்த தேதியிலிருந்து 2 ஆண்டுகளுக்குள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்த தேதியிலிருந்து பிரதிவாதியிடம் மாதாமாதம் ரூ.2 ஆயிரம் பெற்றுவந்தேன் என்றால் சரியல்ல. ஒப்பந்த தேதியிலிருந்து கிரையம் பெற்றுக்கொள்ள தயாராக இருந்தேன் என்று காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் ஒப்பந்தம் தொடர்பாக பஞ்சாயத்து ஏற்பட்டு ஒப்பந்ததை நான் ரத்துசெய்து தருவதாக நான் ஒத்துக்கொண்டேன் என்றால் இல்லை. சாதாரணமாக சொத்தின் வழிகாட்டி மதிப்பை விட சந்தை மதிப்பு கூடுதலாக இருக்கும் என்றால் சரியல்ல. நான்

சொல்வது தவறு என்றும், வழிகாட்டி மதிப்பை விட சந்தை மதிப்பு கூடுதலாக இருக்கும் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் மதிப்பையே காண்பித்துள்ளேன் என்றால் ஆமாம். 2018 ம் ஆண்டு சொத்தை கிரையம் பெற்ற நிலையில் 3 ஆண்டுகளில் சொத்தின் மதிப்பு கூடியிருக்கும் என்றால் இல்லை. வெள்ளியங்கிரி என்பவரை விசாரித்தால் உண்மை நிலை தெரியும் என்றால் சரிதான். நான் சொத்தை கிரையம் பெறுவதற்காக ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை என்றும், கடனுக்காக ஒரு பொறுப்பிற்காக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் ஒப்பந்த தேதியிலிருந்து 3 ஆண்டுகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்தப்படி எனக்கு முன்தொகையை கேட்க எனக்கு உரிமையில்லை என்றும், எனவே தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் பெற்ற கடன் முழுவதையும் திரும்ப எனக்கு செலுத்திவிட்டார் என்றால் தவறு. பிரதிவாதியிடமிருந்து எந்த தொகையும் பெற எனக்கு அருகதையில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.